




**We Shine Academy™**

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2020

*We Are Here..!! To Guide You..!!*






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 13.03.2020

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்







# தமிழக நிகழ்வுகள்

- தற்பொழுது, **சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைச் 'சலோ'** செயலியின் **உதவியுடன் கைபேசியில் கண்காணிக்க முடியும்.**
  - இந்தச் செயலியானது அருகிலுள்ள பேருந்து நிறுத்தங்கள் குறித்தத் தகவல்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு நிறுத்தத்திற்கும் வருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள அடுத்த ஐந்து பெருநகரப் போக்குவரத்துக் கழக (Metropolitan Transport Corporation – MTC) பேருந்துகள் குறித்த விவரங்களையும் அளிக்கும்.
  - **செய்தி துளிகள்**
    - இது அகல்நிலை மற்றும் நிகழ்நேரம் (ஆன்லைன்) ஆகிய இரண்டு முறைகளிலும் இயங்கும் திறன் கொண்டது.
    - தற்போது இந்தச் செயலியானது சோதனை முயற்சியாக (பீட்டா) தொடங்கப்பட்டுள்ளது. இது விரைவில் அரசாங்கத்தின் '**லோக்கேட் மை பஸ்**' (LAMB – Locate My Bus App) **என்ற செயலியாக தொடங்கப்பட இருக்கின்றது.**

# தேசிய நிகழ்வுகள்

- **'பிரக்யான் மாநாடு – 2020'** என்ற இந்திய இராணுவ சர்வதேச கருத்தரங்கானது தரைவழிப் போர் ஆய்வு மையத்தினால் (CLAWS – Centre for Land Warfare Studies) ஏற்பாடு செய்யப்பட்டது.
    - இந்த நிகழ்வானது தேசிய மற்றும் சர்வதேச இராணுவ வல்லுநர்களுக்கு **'தரைவழிப் போரின் சிறப்பியல்புகளை மாற்றுதல் மற்றும் இராணுவத்தின் மீதான அதன் தாக்கம்'** என்ற தலைப்பில் விவாதிப்பதற்கான ஒரு தளத்தை உருவாக்குகின்றது.
    - **செய்தி துளிகள்**
        - தரைவழிப் போர் ஆய்வு மையத்தினால் (CLAWS – Centre for Land Warfare Studies) ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கருத்தரங்கமானது புது தில்லியில் தொடங்கியது.

- QS பாடத் தரவரிசை – 2020ன் படி, **வேலூர் தொழில்நுட்ப நிறுவனமானது** (Vellore Institute of Technology – VIT) பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பாடத்திற்காக இந்தியாவின் சிறந்த (முன்னணி) தனியார் கல்வி நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
    - QS உலகப் பல்கலைக் கழகத் தரவரிசையில் இந்தப் பல்கலைக்கழகமானது **உலகின் 450 பல்கலைக் கழகங்களிடையே சிறந்த பல்கலைக் கழகமாக இடம் பெற்றுள்ளது.**
    - **செய்தி துளிகள்:**

We Shine Academy™

- QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை என்பது ஐக்கிய ராஜ்ஜியத்தின் குவாக்கரெல்லி சைமண்ட்ஸ் (Quacquarrelli Symonds – QS) நிறுவனத்தால் வெளியிடப்படும் பல்கலைக்கழக தரவரிசைகளின் ஒரு வருடாந்திர வெளியீடாகும்.

## சர்வதேச நிகழ்வுகள்

- **கனடாவிலுள்ள, பிராண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மெழுகுப் புழுக்களின் வயிற்றிலுள்ள சில கிருமிகள் பிளாஸ்டிக்கை எளிதில் செறித்து, ஆல்கஹாலாக மாற்றித்தரும் திறனைக் கொண்டிருந்ததை கண்டறிந்துள்ளனர்**
    - புழுக்களுக்கும், ஆய்வகத்தில் பிளாஸ்டிக்கை கொடுத்து, பெருமளவில் பிளாஸ்டிக் குப்பையை ஆல்கஹாலாக மாற்ற முடியும் என, பிராண்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.
    - **செய்தி துளிகள் :**
        - தேனீ வளர்ப்போருக்கு சவாலாக இருக்கும் மெழுகுப் புழுக்கள் குறித்து ஆராய்ந்தபோது இது தெரியவந்தது. பெருகி வரும் பிளாஸ்டிக் பொருளை என்ன செய்வது என தெரியாமல் இருக்கும் நிலையில் இந்த கண்டுபிடிப்பு வருங்கால மனிதர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்

## முக்கிய தினங்கள்

- உலகெங்கிலும் ரோட்டராக்டர்கள் வழங்கும் சேவைகளை அங்கீகரிக்க ஒவ்வொரு ஆண்டும் **மார்ச் 13** அன்று **உலக ரோட்டராக்ட் தினம்** அனுசரிக்கப்படுகிறது.
    - ரோட்டராக்ட் ரோட்டரி சர்வதேச இளைஞர் திட்டமாக 1968 இல் அமெரிக்காவின் வட கரோலினாவில் தொடங்கப்பட்டது.

## திருக்குறள்

**குறள் : 136**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : ஒழுக்கமுடைமை

**ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்**

**ஏதம் படுபாக் கறிந்து.**

**விளக்கம்:** ஒழுக்கம் தவறுவதால் தமக்குக் குற்றம் உண்டாவதை உணர்ந்து, அறிவுடையோர் அவ்வொழுக்கத்திலிருந்து தவறமாட்டார்.